**செய்தி வெளியீடு எண்: 914** **நாள்: 15.10.10**

**உலக உணவு தினவிழா விழிப்புணர்வு முகாம்**

உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் '**உலக உணவு தினம்**' 15/10/2010 அன்று சென்னை சேப்பாக்கம் வளாகத்தில் மற்றும் சென்னை எத்திராஜ் கல்லூரி குடிமக்கள் நுகர்வோர் மன்ற அமைப்பதிலும் கொண்டாடப்பட்டது. இதில் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக அலுவலர்கள் கலந்துக் கொண்டார்கள். பசிக்கு எதிராக ஒன்றுபடுவோம் என்ற தலைப்பில் இந்த வருடம் உலக உணவு தினம் கொண்டாடப்பட்டது. உணவு, மனிதன் உலகில் உயிர் வாழ முதன்மையான தேவை. உணவு பற்றாக்குறையால் தான் உலகில் அனைத்து குற்றங்களும் நடக்கின்றன. ஆகவே பசியற்ற இந்தியாவை உருவாக்குவதே நம் குறிக்கோள். இதை குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் இத்துறை சார்பில் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

விழிப்புணர்வு குறித்த ஸ்லோகங்கள் அடங்கிய நோட்டீஸ்களை துணை ஆணையர் அவர்கள் மாணவிகளுக்கு வழங்கி உணவின் முக்கியத்துவத்தையும் பசிக்கு எதிராக நாம் போராட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

கா. பாலச்சந்திரன்
ஆணையாளர்
உணவு பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை
தமிழ்நாடு அரசு
ஆணையாளருக்காக

**வெளியீடு:–**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**